**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>**
**<u>ஸ்ரீவில்லிபுத்தூர்</u>**

**OS.No : 61/2021** **நாள் 23.02.2026.**

**வாசா.1, திரு.முத்தீஸ்வரன்**

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 1 முதல் 3 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் இவ்வழக்கில் 2ம் வாதி. 1ம் வாதி பன்னீர்செல்வம் என் தாயார் அவர் இறந்துபோய்விட்டார். நான் டிப்ளமோ சிவில் இஞ்சினரிங் வேலை படிப்பை படித்து வேலை பார்க்கிறேன் என் சொந்த ஊர் சிவகாசி, தேவர்குளம். என் பெற்றோர்களுக்கும் சொந்த ஊர் தேவர் குளம். நான் ஆரம்ப காலம் முதல் தேவர் குளத்தில் இருந்தேனா என்று கேட்டால் எனக்கு வயது 6 இருக்கும்போதில் இருந்தே வயது 51 வரைக்கும் நான் காஞ்சிபுரத்திலும் , சென்னையிலும் வசித்து வந்தேன். வழக்கில் உள்ள 3ம் வாதி என் தங்கை அவருக்கு திருமணம் ஆகி நடுவப்பட்டியில் குடியேறியுள்ளார். அவருக்கு 1999ம் ஆண்டு திருமணம் நடந்துள்ளது. வழக்கில் உள்ள 4ம் வாதியான என் தம்பி கிருஷ்ணசாமி சுமார் 25 ஆண்டு காலமாக அவர் என்னுடன் சென்னையில் இருந்து கொண்டு தற்போது சிவகாசிக்கு வந்துவிட்டார் .5ம் வாதி என் தம்பி பாலமுருகன் சிவகாசியில் குடியுள்ளார். பிராது தபசில் சொத்துக்களை யார் யாருக்கு பாத்தியப்பட்டு யார் யார் எப்போது முதல் அனுபவித்து வருகிறன்றார்கள் என்ற விபரம் எனக்கு நேரில் தெரியுமா என்று கேட்டால் என் அப்பாவும் மாமாவும் சொல்லி தெரியும். பிராது சொத்தின் பழைய சர்வே எண்.963 புதிய சர்வே எண்.963/3ஏ ஆகும். ஆரம்பத்தில் இந்த சொத்தின் மொத்த விஸ்தீரணம் 19 ஏக்கர் 42 சென்ட். இந்த மொத்த விஸ்தீரணமும் ஆதியில் செந்தட்டி காளை என்பவருக்கு பாத்தியப்பட்டு இருந்தது என்றால் சரிதான். செந்தட்டி காளை என்பவருக்கு பெரிய கருப்பண தேவர், சின்ன கருப்பண தேவர் , முத்துச்சாமி தேவர் என்ற மூன்று மகன்கள் என்றால் சரிதான். செந்தட்டி காளை தேவர் உயிரோடு இருந்தபோதே அவருடைய 2வது மகனான சின்ன கருப்பண தேவர் திருமணம் ஆகாமல் இறந்துபோய்விட்டார் என்றால் சரிதான். சின்ன கருப்பண தேவர் இறந்த பின்பு அவருடைய சகோதரர்களும் அவருடைய தகப்பனாரும் மேற்படி சொத்தை பொதுவாக அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் அது சரிதான். செந்தட்டிகாளை தேவர் இறந்த பின்பு அவருடைய சொத்தை பெரிய கருப்பண தேவரும், முத்துச்சாமி தேவரும் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி வாய்மொழி பாகப்படி சர்வே எண்.963ல் பெரியகருப்பண தேவருக்கு 9 ஏக்கர் 71 சென்டும் முத்துச்சாமி தேவருக்கு 9 ஏக்கர் 71 சென்டும் பாகம் ஏற்பட்டது என்றால் சரிதான். பெரிய கருப்பண தேவர் தனக்கு ஒதுக்கப்பட்ட 9 ஏக்கர் 71 சென்ட நிலத்தை ஆண்டு அனுபவித்து வந்து நல்ல வீரப்பதேவர் என்பவரை மட்டும் வாரிசாக விட்டுவிட்டு இறந்துபோய்விட்டார் என்றால் சரிதான். அதன் பின்பு நல்ல வீரப்ப தேவர் மட்டுமே அந்த 9 ஏக்கர் 71 சென்ட் நிலத்தை அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். நல்ல வீரப்ப ்தேவருக்கு , கருப்பண தேவர், பெரியசாமி தேவர், கன்னையா தேவர் , சுந்தர தேவர் ஆகியோர்கள் தான் வாரிசுகள் என்றால் சரிதான். நல்ல வீரப்ப தேவர் இறந்த பின்பு அந்த 9 ஏக்கர் 71 சென்ட நிலத்தை அவரது வாரிசுகள்

நான்கு பேரும் சேர்ந்து தான் பொதுவில் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் நான்கு பேரும் பொதுவாக வைத்து அனுபவித்து வந்த அந்த 9 ஏக்கர் 71 சென்டை அவர்களுக்குள் வாய்மொழியாக பிரித்து கொண்டார்கள் என்றார் சரிதான்.. அவ்வாறு பிரித்துகொண்டதில் ஒவ்வொருவருக்கும் 2 ஏக்கர் 42 சென்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு ஒதுக்கப்பட்டதில் சுந்தர தேவருக்கு ஓதுக்கப்பட்டிருந்த 2 ஏக்கர் 42 சென்டை அவர் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். சுந்தர தேவருக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவி லட்சுமி என்பவர் மூலமாக பெரிய கருப்பன தேவர் , நல்லதம்பி தேவர் என்ற இரண்டு குழந்தைகள் என்றால் சரிதான். 2 வது மனைவி தங்கம்மாள் மூலமாக சின்ன கருப்பன தேவர் , முத்துதேவர் என்ற இரண்டுகுழந்தைகள் என்றால் சரிதான். சுந்தர தேவருக்கு ஒரு பெண் மகள் இருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. சுந்தர தேவர் இறந்த பின்பு அந்த 2 ஏக்கர் 42 சென்ட் நிலத்தை இந்த நான்கு பேரும் சேர்ந்து பொதுவாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி நான்கு பேரும் சேர்ந்து பொதுவாக அனுபவித்து வந்தார்கள் என்பதற்கான பட்டா என்னிடத்தில் காண்பிக்கப்படுபவை என்று சொன்னால் மேற்படி ஆவணத்தில் முத்திரையிடப்பட்ட அலுவலகமானது இயங்கவில்லை என்றும் அதுபோன்று அலுவலகம் இல்லை என்றும் நான் தகவல் அறியும் உரிமை சட்டப்படி தகவல் பெற்றுள்ளேன் மேற்படி பட்டா ஆவணம் மோசடியானது . என்னிடம் காட்டப்பட்ட பட்டாவை பொறுத்து நான் தற்போது அளிக்கும் சாட்சியமானதை பொறுத்தமட்டில் நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும் சாட்சிய பிரமாண பத்திரிக்கையிலும் சொல்லவில்லை என்று சொன்னால். மேற்படி பட்டா ஆவணத்தை 1 முதல் 3 எதிர்வாதிகள் தரப்பில் என்னிடத்தில் இன்று காண்பிப்பார்கள் என்று எனக்கு தெரியாது என்பதால் நான் இது குறித்துசொல்லவில்லை. மேற்படி என்னிடம் காட்டப்பட்ட பட்டாவனது மோசடியானது என்று நான்பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. சுந்தர தேவர் இறந்த பின்பு அவர்களது வாரிசுகள் நான்கு பேரும் தலா 2 ஏக்கர் 42 சென்டை வாய்மொழியாக பிரித்துக்கொண்டார்களா என்று கேட்டால் வாய்மொழியாக பிரித்துக்கொள்ளவில்லை கூட்டாக தான் அனுபவித்து வருகிறார்கள். சுந்தர தேவர் இறந்த பின்பு அவரது வாரிசுகளான பெரியகருப்பன தேவர், நல்லதம்பி தேவர், சின்னகருப்பன தேவர், முத்துதேவர் ஆகியோர்கள் தான்கூட்டாக அனுபவித்து வந்தார்என்று நான் சாட்சியம் அளிக்கிறேன். மேற்படி சாட்சியிடம் சுந்தர தேவர் இறந்த பின்பு அவரது வாரிசுகள் நான்கு பேரும் தலா 2 ஏக்கர் 42 சென்டை வாய்மொழியாக பிரித்துகொண்டார்களா என்று 1 முதல் 3 எதிர்வாதிகள் தரப்பில் கேள்வி கேட்ட போது பிரித்துகொண்டார்கள் அதில் பெரியகருப்பண தேவருக்கு 1 ஏக்கர் 21 சென்ட், சின்ன கருப்பண தேவருக்கு 60 சென்ட், முத்து தேவருக்கு 61 சென்டுமாக பிரித்துக்கொண்டார்கள். நல்லதம்பி தேவருக்கு அந்த 2 ஏக்கர் 42 சென்டில் 60 சென்டையும், பெரியகருப்பன தேவருக்கு

61 சென்டும் , சின்ன கருப்பன தேவருக்கு 60 சென்டும் , முத்து தேவருக்கு 61 சென்டும் ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் அதுசரியல்ல.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டி இருதரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 23rd day of February 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.